TAMIL

singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# LILA
UNENDING PLAY BY JANE LEE

18 MAY
—
24 SEP 2023

TANJONG PAGAR DISTRIPARK

## *லைலா: 'ஜேன் லீ'யின் முடிவில்லா விளையாட்டு*

ஓவியம் என்றால் என்ன என்பதை ஆராய்வதும் ஒரேகாலக் கலையுடன் அது கொண்டிருக்கும் தொடர்பை ஆராய்வதும் 'ஜேன் லீ'யின் பயிற்சிமுறையின் நடுக்கருவாகும். மரபுப் பாணி ஓவியத்தில் பயிற்றுவிக்கப்பட்ட போதிலும், ஊடகம் பற்றிய ஆய்வு அவரது தனிப்பட்ட ஒன்று என்பதைப் போலவே ஓவிய வரலாற்றை அடிப்படையாகவும் கொண்டது. ஓவியரைப் (ஜேன் லீ) பொறுத்தவரை, ஓவியத்தின் இயல்புக்கான தேடல் என்பது அவரது சொந்த அடையாளத்தைத் தேடுவதாகும், இஃது அவர் தென்கிழக்கு ஆசியாவில் வாழ்ந்ததாலும் பணிபுரிந்ததாலும் பெற்ற அனுபவங்கள் மற்றும் தாக்கங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

'லீ'யின் படைப்புகள் செழுமையான அடுக்குகள் மற்றும் மிகவும் தொட்டுணரக்கூடிய வரைதுணிகள் கொண்டவை, அவை அன்றாடச் செய்கைகள் (வெட்டுதல், கழுவுதல், உருட்டுதல், கரண்டி கொண்டெடுத்தல் போன்றவை), பொதுவான பொருள்கள் (பிதுக்கு பைகள், அகற்று உளிகள், அழுத்து குழல்கள் போன்றவை) மற்றும் ஓவியம் வரைதலின் அடிப்படைக் கூறுகளின் (வரைதுணி, விரிப்பு, நிறப்பூச்சு) தன்மைகள் மற்றும் பண்புகளால் ஊக்கம் பெற்ற அவரது பொருள்கள் மற்றும் நுட்பங்களுடனான ஆய்வுகளை எதிரொலிக்கின்றன.

தன்னிச்சை, வாய்ப்பு மற்றும் விளையாட்டு ஆகியவை 'லீ'யின் ஓவியச் செயல்முறைக்கு அடிகோலுகின்றன.

வரைதுணிகள் மற்றும் கட்டப்பட்ட நிறப்பூச்சு அடுக்குகள் உதிர்ந்து, கிழிந்து, தரையில் விழுந்து அல்லது சுவர்கள் வழியாகத் துளைக்க அனுமதிக்கப்படுகின்றன, அதன்மூலம் ஓவிய வெளி அதன் உடனடிச் சுற்றுப்புறங்களுக்கு விரிவுபடுகிறது.

லைலா: 'ஜேன் லீ'யின் முடிவில்லா விளையாட்டு, ஓவியக் கண்காட்சி எப்படி இருக்கலாம் என்பதற்கான வாய்ப்பை விரிவுபடுத்துகிறது. படைப்புகளில் மட்டுமல்லாது, அது பார்வையாளருக்கும் படைப்புகளுக்கும் இடையிலான இடஞ்சார்ந்த உறவிலும் விளையாட்டுத்தன்மையை உள்ளடக்கியது. ஓவியம் என்றால் என்ன, அஃது என்னவாக இருக்கலாம் என்பதைப் பற்றிய 'லீ'யின் பேராய்வுகளை இந்தக் கண்காட்சி தொடர்கிறது. மேற்பரப்பு, பொருள், உடல் அல்லது இடைவெளிகள் மற்றும் உணர்வுகளுக்கு இடையிலான விளையாட்டு ஆகியவற்றை அவ்வாய்வு உள்ளடக்கும்.

## ஓவியர் பற்றிய தகவல்

ஜேன் லீ' ஓவியப் பயிற்சிமுறையின் பொருள் மற்றும் கருத்தியல் பேராய்வுகளுக்காக மிகவும் பிரபலமானவர். அவரது படைப்புகள் பெரும்பாலும் செழுமையான அடுக்குகள் கொண்டவை, அவை அமைப்பு வலிமையையும் காட்சி வலிமையையும் கொண்டு, சிற்பக்கலைக்கு ஒத்ததாக இருக்கின்றன. வழக்கமான ஓவியச் செய்கைகள் மற்றும் கருவிகளைத் தாண்டி, அன்றாட அசைவுகள் மற்றும் செயன்முறைகள் அவரது படைப்புகளில் பொதிந்துள்ளன. அவரது பல ஓவியங்கள் இயக்கத்தில் இருப்பவையாகத் தெரிகின்றன: அவை விழுகின்றன, விரிகின்றன, தொங்குகின்றன அல்லது சரிகின்றன. 'லீ'யைப் பொறுத்தவரை, ஓவியம் என்பது மேற்பரப்புகள் மற்றும் வரையறுக்கப்பட்ட விளிம்புகளுக்குள் பூசப்பட்ட நிறப்பூச்சு மட்டுமன்று, அதனைச் சுற்றியுள்ள வெளியில் ஊடுருவிச் செல்வதையும் உள்ளடக்கியது. அவருக்கிருந்த ஓவியத்தின் இடஞ்சார்ந்த ஆர்வம், களிமண், சிமெண்ட் மற்றும் துருப்பிடிக்காத எஃகு உட்பட ஓவியத்தில் புதிய பொருள்களைப் பயன்படுத்தி ஆய்வுசெய்ய வழிவகுத்தது.




1 *லைலா (ஆகயிறுதி விளையாட்டு)*
**2023**
கலப்பு ஊடகம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தால் வரையப் பணிக்கப்பட்டது

2 *இருளின் புகழ்ச்சியில்*
**2023**
அக்ரிலிக் நிறப்பூச்சு, மரத்தின்மீது அக்ரிலிக் வலுவான களிமம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தால் வரையப் பணிக்கப்பட்டது

3 *உட்குழிவு மற்றும் வெற்று*
**2023**
கண்ணாடி-முடிவு கொண்ட துருப்பிடிக்காத எஃகு, பாலியூரிதீன் நிறப்பூச்சு, மரம், அக்ரிலிக்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தால் வரையப் பணிக்கப்பட்டது

4A *பொருள் I*
**2011**
மரத்தில் கலப்பு ஊடகம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு

4B *பொருள் II*
2011
மரத்தில் கலப்பு ஊடகம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு

4C *‘ஃபெடிஷ்’ - வெள்ளை II*
**2011**
அக்ரிலிக் நிறப்பூச்சு, வரைதுணியில் அக்ரிலிக் வலுவான களிமம்
இஸ்தானா கலைச் சேகரிப்பு

5 *நிலை*
**2009**
கலப்பு ஊடகம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு
‘சியா யூ கே’யின் நினைவாக ‘பிஞ்சாய்ட்ரீ’ அறக்கட்டளையின் ஆதரவுடன் வாங்கப்பட்டது

1 *லைலா (ஆகயிறுதி விளையாட்டு)*
**2023**
கலப்பு ஊடகம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தால் வரையப் பணிக்கப்பட்டது

2 *இருளின் புகழ்ச்சியில்*
**2023**
அக்ரிலிக் நிறப்பூச்சு, மரத்தின்மீது அக்ரிலிக் வலுவான களிமம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தால் வரையப் பணிக்கப்பட்டது

3 *உட்குழிவு மற்றும் வெற்று*
**2023**
கண்ணாடி-முடிவு கொண்ட துருப்பிடிக்காத எஃகு, பாலியூரிதீன் நிறப்பூச்சு, மரம், அக்ரிலிக்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தால் வரையப் பணிக்கப்பட்டது

ஓவியர் இந்தப் படைப்புகளில் வாழ்க்கையின் சாரத்தையும் "ஓவியத்தில் உயிர்ப்பு" என்பதையும் தேடுகிறார், ஓவியம் என்று கருதப்படும் ஒன்றின் வரம்புகளையும் அஃது இருக்கும் இடத்தையும் ஆய்கிறார். இந்தப் படைப்புகளில், வெளி, ஒளி, எதிரொளிப்பு மற்றும் நிழல்கள் ஆகியவையே ஊடகங்கள். அவற்றின் தோற்றம் பார்வையாளர்களின் உடல் நகர்வுகள் மற்றும் அலையும் பார்வைக்கேற்ப மாறுகிறது. தொடர்ச்சியான அறைகளில் நிறுவப்பட்ட, பார்வையில் உள்ள பொருள்கள்—வழக்கமாகக் கலைப்படைப்புகளின் முழுமை எனக் கருதப்படும் அவை—நிழலுக்குள் பின்வாங்குகின்றன. மிகவும் உணர்திறன் கொண்ட பார்வையாளர் மட்டுமே ஓவியரின் படைப்புகளின் சிறப்பியல்பு நிறைந்த, ஓவியத்துவமான மேற்பரப்புகளைக் கண்டறிய முடியும். இந்த "ஓவியங்கள்" மறுஉருவாக்கம் மற்றும் ஆவணப்படுத்தலை எதிர்க்கின்றன, ஏனெனில் அவை உடனடியான அனுபவங்கள் மற்றும் கலைப்படைப்புக்கும் பார்வையாளருக்கும் இடையிலான உடலிருப்பு அடிப்படையிலான உறவால் வரையறுக்கப்படுகின்றன.

4A *பொருள் I*
**2011**
மரத்தில் கலப்பு ஊடகம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு

4B *பொருள் II*
2011
மரத்தில் கலப்பு ஊடகம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு

*பொருள் I* மற்றும் *பொருள் II* ஆகியவற்றில் உள்ள நிறப்பூச்சு அதன் வரைதுணியிலிருந்து தப்பி ஓர் உடலியல் பொருளாக மாறியிருக்கிறது, வெவ்வேறு கோணங்கள் மற்றும் கண்ணோட்டங்களில் அணுகப்பட வேண்டும் எனக் கோருகிறது. ஓவியம் என்பது எப்படி இரு பரிமாண உருவமைப்பு மற்றும் வெளிப்பாடாகக் கருதப்படுகிறது என்பதை இந்தப் படைப்புகள் ஆராய்கின்றன. "வரைதுணியின்" ஒரு பகுதியை "கிழிக்கும்" செயல், ஒரு படத்தை உருவாக்குவது என்ன என்பது பற்றி நமக்கிருக்கும் எண்ணங்களை அறைகூவல் செய்கிறது. நிறப்பூச்சின் இந்த "உடல்" பகுதிதான் கலைப்படைப்புகளுக்கு உணர்ச்சிகரமான தரத்தை அளிக்கிறது மற்றும் செழுமையாக உள்ளமைக்கப்பட்ட, பல பரிமாண மேற்பரப்புகள், நுட்பமான தொனிகள் மற்றும் இழைவுத்தோற்ற மாறுபாடுகளுக்குப் பலகூறுகளைச் சேர்க்கிறது.

4C *'ஃபெடிஷ்' - வெள்ளை II*
**2011**
அக்ரிலிக் நிறப்பூச்சு, வரைதுணியில் அக்ரிலிக் வலுவான களிமம்
இஸ்தானா கலைச் சேகரிப்பு

*"எனது 'ஃபெடிஷ்'* தொடரின் படைப்புகள் உலர்ந்த நிறப்பூச்சுத் தோலைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டன, நான் ஒரு நாள் எனது தட்டகங்களைத் தூய்மை செய்தபோது அதனைக் கண்டுபிடித்தேன். எனது தட்டகங்களிலிருந்து உலர்ந்த நிறப்பூச்சு எச்சங்களின் அடர்த்தியான அடுக்குகளை என்னால் வெளியே எடுக்க முடிந்தது. இஃது அழகானது மற்றும் எதிர்பாராதது என்று நான் நினைத்தேன். பின்னர் நான் எச்சங்களை மீளுருவாக்கி அவற்றைச் சிறு சிறு ரோஜாச் சுருள்களாக உருட்டி, வெங்காயம் போல வெட்டி, துண்டுகளாக்கி, மீண்டும் வரைதுணியில் இணைத்தேன். இது கட்டுமானம், மறுகட்டமைப்பு மற்றும் புனரமைப்புச் செயல்முறையாகும். - ஜேன் லீ

'லீ'யின் நன்கு அறியப்பட்ட தொடர்களில் ஒன்றான 'ஃபெடிஷ்', வெட்டப்பட்டு, உருட்டப்பட்டு, வடிவமைக்கப்பட்ட உலர்ந்த நிறப்பூச்சினால் ஆன பளபளப்பான அமைப்புகளையும் நிறங்களையும் கொண்டுள்ளது. 2009ஆம் ஆண்டு தொடங்கிய, நீர்ம, திண்ம, உறை நிலை என வெவ்வேறு நிலைகளில் நிறப்பூச்சுகளைப் பயப்படுத்தி செய்யப்படும் இந்த ஆய்வுகள் அவரை வரன்முறைகளின் எல்லைகளில் இருந்து விடுவித்து, ஓவியங்கள் அமைந்துள்ள வெளியில் தன்னிச்சையாக வேலை செய்யத் தூண்டியது. இஃது அவரது ஓவியப் பயிற்சிமுறையில் ஒரு சிற்ப மற்றும் இடஞ்சார்ந்த பயிற்சிமுறையை உருவாக்க அனுமதித்தது.

5 *நிலை*
**2009**
கலப்பு ஊடகம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு
'சியா யூ கே'யின் நினைவாக 'பிஞ்சாய்ட்ரீ' அறக்கட்டளையின் ஆதரவுடன் வாங்கப்பட்டது

லீ சிங்கப்பூர் ஈராண்டுவிழா 2008இல் 'வெறும் வரைதுணி' என்ற தலைப்பில் தனது முதல் பெரிய அளவிலான ஓவியத்துடன் பங்கேற்றபோது வரையப்பட்டது. பெரிய அனைத்துலகக் கண்காட்சிகள் நிறுவல்கள் மற்றும் பிற வளர்ந்து வரும் கலை ஊடகங்களுக்கு ஆதரவாக இருந்த அந்நேரத்தில், 'நிலை' ஒரேகாலக் கலை நடைமுறைகளில் 'லீ'யின் பிரதிபலிப்பை எடுத்துக்காட்டுகிறது. சிங்கப்பூர் ஈராண்டுவிழா 2008இல் சேர்க்கப்பட்ட ஒரே ஓவியராக, லீ ஓவியத்தின் "நிலையைக்" கேள்விக்குள்ளாக்கினார் மற்றும் ஓவியத்தின் மேற்பரப்பை வெளியே இழுக்கும் செய்கையுடன் ஒரேகால கலைத் துறையில் இருக்கும் இந்த நீண்டகால நடைமுறையைக் கண்டறிய முயற்சித்தார்.

'நிலை'யில், லீ நிறப்பூச்சை உன்னிப்பாக ஒரு பெரிய, ஆடம்பரமான துணியில் நெய்கிறார். ஓவியம் என்பது ஒரு சட்டமிடப்பட்ட, இரு பரிமாணப் பொருளாகக் கருதப்படுவதை அறைகூவலுக்கு உட்படுத்தும் வகையில், அதன் மேற்பரப்புச் சுவரில் இருந்து உரிந்து தொங்க அனுமதிக்கப்படுகிறது, அஃது உருவகத்தின் மிச்சம் போல் தரையில் குவிந்து கிடக்கிறது. இன்னும், படைப்பானது சுவரில் ஒட்டிக்கொண்டு, ஓர் "ஓவியம்" என்ற அதன் நிலையை ஓர் உருவமாக விட்டுவிட மறுக்கிறது. இங்கே, படைப்பானது, ஒரு முடிக்கப்பட்ட படத்தின் கருவூட்டல் மற்றும் ஓவியத்தின் வரம்புகளிலிருந்து விடுதலைக்கான எதிர்ப்பைக் குறிக்கிறது, அதன் மையத்திலிருந்து அகற்றப்பட்டால், ஓவியத்தில் எஞ்சியிருப்பது ஒரு வெற்றிடமாகும், ஆனால் அஃது எல்லையற்ற உருவகத்துக்கான ஓர் இடமாகும்.